**DEPOSITION OF WITNESSES**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I, KALLAKURICHI**

| | | |
|---|---|---|
| Name | : ராஜசேகர் | **C.C.No.472/2025** |
| Husband's Name | : ராமசந்திரன் | |
| Village | : வளையாம்பட்டு | |
| Taluk | : கள்ளக்குறிச்சி | |
| Calling | : தலைமை காவலர் | |
| Religion | : | |
| Age | : 44 | |

Petitioner - (Pw1) (LW1)
Defence -
Court -

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2026.

எதிர்மனுதாரர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்சமயம் எடைக்கல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.09.2024 அன்று பகல் 13.45 மணியளவில் அப்போது மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்த திரு.ராஜசேகர் தலையில் நானும் தலைமை காவலர் ரவி என்பவரும், கள்ளக்குறிச்சி – மோகூர் கிராமத்தில் மதுவிலக்கு கண்காணிப்பில் இருந்தபோது அங்கே ஆஜர் எதிரி சந்தேகதகப்படும் படி நின்று கொண்டிருந்தவரை எங்களை பார்த்ததும் தப்பி ஓட எத்தனித்த எதிரியை நாங்கள் மடக்கி பிடித்தோம். அவர் நின்று கொண்டிருந்த இடத்தை சோதைன செய்தபோது ஒரு பையில் முடி திறந்த நிலையில் 180 அளவுள்ள Old Chef ஒட்ட பட்ட பிராந்தியும் 13 பாட்டில்களும், மேலும் மூடி திறந்த நிலையில் 180 மி.லி அளவுள்ள Veeran என்ற ஸ்டிக்கர் ஒட்டப் பட்ட 2 பாட்டில்கள் ஆக 15 பாட்டில்களும், ரூபாய் 200/– ம் இருந்தது. அவரை உதவி ஆய்வாளர் விசாரித்தபோது தனது பெயர் ஆறுமுகம் என்றும் தான் மோகூர் கிராமத்தில் வசிப்பதாகவும் கூறினார்,. மேலும் எவ்வித அரசு அனுமதியும், உரிமமும் இல்லாமல் மதுபானத்தை விற்பனைக்காக வைத்திருந்தாகவும் கூறினார். எதிரியை கைது செய்து அதில் அவர் வைத்திருந்த 15 மதுபாட்டில்களும் விஷம் கலந்துள்ளதா என்று சந்தேகித்து சம்பவ இடத்திலேயே உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் தயாரித்து நான் முதலாவதாக சாட்சி கையொப்பம் இட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.1** அக குறியிடு செய்பய்படுகிறது. பின்னர் எதிரியையும், எதிரியிடம் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை காவல் ஆய்வாளர் காவல் நிலையம் கொண்டுவந்து எதிரி மீது நிலையகுற்ற எண். 295/2024 பிரிவுகள் 4(1) (A) , 4 (1) (i) TNP Act . முதல் தகவல் பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலில் உட்படுத்தினார். பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார். வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் ஆனது 25.09.2024 ம் தேதி காலை 12.40 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு புறம்பட்மேடாமத் என்றால் 12.00 மணிக்கு புறப்பட்டோம். உதவி ஆயவாளருக்கு சம்பவம் தொடர்பாக ரகசிய தகவல் கிடைத்து அங்கு சென்றோம். எங்களுடன் யார் யார் வந்து என்றால் நான், உதவி ஆய்வாளர் மற்றும் தலைமை காவலர் ரவி ஆகியோர் சென்றோம். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். மூவரும் ஒரே வண்டியில் சென்றோமா என்றால் இரண்டு வண்டியில் சென்றோம். வாகனத்தில் பதவு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எதிரியை கைது செய்த இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடம் தான் என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும் போது எத்தனை பார்த்தார்கள் என்றால் 2 பொதுமக்கள் பார்த்திருப்பார்கள். எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து தான் முதல் தகவல் அறிக்கை பதிந்தோம் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் எங்கு வைத்து தயாரித்தோம் என்றால் சம்பவ இடத்தில். அதில் என்னுடைய கையொப்பம் உள்ளதா என்றால் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். கைப்பற்றுதல் மகசரில் நாங்கள் கைப்பற்றி 15 பாட்டில்களிலும் தயாரித்த தேதி மற்றும் காலவதி தேதியும் குறிப்பிட்டு இருந்ததாக கைப்பற்ற மகசரில கூறி உள்ளோமா என்றால் இல்லை. நாங்கள் கைப்ற்றி பாட்டில்களை ஆஜர் எதிரி எந்த மதுக்கடையில் வாங்கிது என்று குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. 15 பாட்டில்களுமோ மூடி திறக்கப்பட்டு பின்பு மூடி வைக்கப்ட்டிருந்து, 15 பாட்டில்களுமே பையில் வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் பையை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரி யாரிடம் மதுப்பாட்டில்களை விற்பதற்காக வைத்திருந்ததாக கூறினார் என்பதை பற்றியும் எங்களுடைய விசாரணயில் கூறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யும் பொழுது உதவி ஆய்வாளர் அனுமதியுடன் தான் பதிவு செய்தோம் என்றால் சரிதான். அன்றை தினம் நிலைய பாராவில் யார் பொறுப்பில் இருந்தார்கள் என்றால் ஞாபகம் இல்லை. நாட்குறிப்பேட்டில் யார் யாருக்கு என்ன என்ன பணி விவரம் இருக்கும் என்றால் சரிதான். நான் கூறுவது போல் சொன்ன நேரத்தில்ட சொன்ன இடத்டதில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து எவ்வித வழக்கு சொத்தும் கைப்பற்ற வில்லை என்றாலும் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விவரத்திற்காக எதிரியின் மீது பொய்வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலலும் காவல் உதவி ஆய்வாளர் கேட்டுககொணட்தற்கு இணங்க எதிரிக்கு எதிராக மீது பொய்சாட்சியம் அளிக்கிறோம் என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

BANUMATHI Digitally signed by BANUMATHI Date: 2026.05.27 11:15:29 +0530

**DEPOSITION OF WITNESSES**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I, KALLAKURICHI**

| | | |
|---|---|---|
| Name | : ரவி | **C.C.No.472/2025** |
| Husband's Name | : வேடி | |
| Village | : சங்கராபுரம் | |
| Taluk | : சங்கராபுரம் | |
| Calling | : தலைமை காவலர் | |
| Religion | : | |
| Age | : 45 | |

Petitioner - (Pw2) (LW2)
Defence -
Court -

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2026.

எதிர்மனுதாரர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்சமயம் பகண்டை கூட்டு சாலை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.09.2024 அன்று பகல் 13.45 மணியளவில் அப்போது மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வந்த திரு.ராஜசேகர் தலைமையில் நானும் தலைமை காவலர் திரு.ராஜசேகர் என்பவரும், கள்ளக்குறிச்சி – மோகூர் கிராமத்தில் மதுவிலக்கு கண்காணிப்பில் இருந்தபோது அங்கே ஆஜர் எதிரி சந்தேகப்படும் படி நின்று கொண்டிருந்தவரை எங்களை பார்த்ததும் தப்பி ஓட எத்தனித்த எதிரியை நாங்கள் மடக்கி பிடித்தோம். அவர் நின்று கொண்டிருந்த இடத்தை சோதைன செய்தபோது ஒரு பையில் முடி திறந்த நிலையில் 180 அளவுள்ள Old Chef ஒட்ட பட்ட பிராந்தியும் 13 பாட்டில்களும், மேலும் மூடி திறந்த நிலையில் 180 மி.லி அளவுள்ள Veeran என்ற ஸ்டிக்கர் ஒட்டப் பட்ட 2 பாட்டில்கள் ஆக 15 பாட்டில்களும், ரூபாய் 200/– ம் இருந்தது. அவரை உதவி ஆய்வாளர் விசாரித்தபோது தனது பெயர் ஆறுமுகம் என்றும் தான் மோகூர் கிராமத்தில் வசிப்பதாகவும் கூறினார்,. மேலும் எவ்வித அரசு அனுமதியும், உரிமமும் இல்லாமல் மதுபானத்தை விற்பனைக்காக வைத்திருந்தாகவும் கூறினார். எதிரியை கைது செய்து அதில் அவர் வைத்திருந்த 15 மதுபாட்டில்களும் விஷம் கலந்துள்ளதா என்று சந்தேகித்து சம்பவ இடத்திலேயே உதவி ஆய்வாளர் கைப்பிடி மகசர் தயாரித்து நான் இரண்டாவது சாட்சி கையொப்பம் இட்டுள்ளேன். என்னிடம் காட்டப்படும் **அ.சா.ஆ.1** உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பின்னர் எதிரியையும், எதிரியிடம் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை காவல் ஆய்வாளர் காவல் நிலையம் கொண்டுவந்து எதிரி மீது நிலையகுற்ற எண். 295/2024 பிரிவுகள் 4(1) (A) ,

4 (1) (i) TNP Act . முதல் தகவல் பதிவு செய்து எதிரியை நீதிமன்ற காவலில் உட்படுத்தினார். பின்னர் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை படிவம் 95 மூலம் வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார். வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் ஆனது 25.09.2024 ம் தேதி காலை 13.45 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு புறம்பட்டோம் என்றால் 12.00 மணிக்கு புறப்பட்டோம். உதவி ஆயவாளருக்கு சம்பவம் தொடர்பாக ரகசிய தகவல் கிடைத்து அங்கு சென்றோம். எங்களுடன் யார் யார் வந்தது என்றால் நான், உதவி ஆய்வாளர், மற்றும் தலைமை காவலர் ராஜசேகர் ஆகியோர் சென்றோம். எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றோம். மூவரும் ஒரே வண்டியில் சென்றோமா என்றால் இரண்டு வண்டியில் சென்றோம். வாகனத்தில் பதிவு எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. எதிரியை கைது செய்த இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள இடம் தான் என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும் போது எத்தனை பேர் பார்த்தார்கள் என்றால் 10 பேர் பொதுமக்கள் பார்த்திருப்பார்கள். எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து தான் முதல் தகவல் அறிக்கை பதிந்தோம் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் எங்கு வைத்து தயாரித்தோம் என்றால் சம்பவ இடத்தில். அதில் என்னுடைய கையொப்பம் உள்ளதா என்றால் முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையது தான். நாங்கள் கைப்பற்றி 15 பாட்டில்களில் எத்தனை திறந்து இருந்தது, எத்தனை பாட்டில் மூடி இருந்தது என்றால் 15 பாட்டில்களுமோ மூடி திறக்கப்பட்டு பின்பு மூடி வைக்கப்ட்டிருந்து, 15 பாட்டில்களுமே பையில் வைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரில் பையை பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யும் பொழுது உதவி ஆய்வாளர் அனுமதியுடன் தான் பதிவு செய்தோம் என்றால் சரிதான். அன்றை தினம் நிலைய பாராவில் யார் பொறுப்பில் இருந்தார்கள் என்றால் தலைமை காவலர் ஜெகதீசன் இருந்தார். நாட்குறிப்பேட்டில் யார் யாருக்கு என்ன என்ன பணி விவரம் இருக்கும் என்றால் சரிதான். நான் கூறுவது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்டதில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து எவ்வித வழக்கு சொத்தும் கைப்பற்ற வில்லை என்றாலும் சரியல்ல. காவல் நிலைய புள்ளி விவரத்திற்காக எதிரியின் மீது பொய்வழக்கு பதிவு செய்யவில்லை என்றாலும் காவல் உதவி ஆய்வாளர் கேட்டுகொணட்தற்கு இணங்க எதிரிக்கு எதிராக மீது பொய்சாட்சியம் அளிக்கிறோம் என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் அணைத்தும் காவல் நிலையத்தில் வதைத்து தயாரிக்கப்பட்டு என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

BANUMATHI Digitally signed by BANUMATHI Date: 2026.05.27 11:15:39 +0530

# DEPOSITION OF WITNESSES
## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. I, KALLAKURICHI

| | | |
|---|---|---|
| Name | : ராஜ்குமார் | **C.C.No.472/2025** |
| Husband's Name | : ஆறுமுகம் | |
| Village | : சேந்தநாடு | |
| Taluk | : உளுந்தூர்பேட்டை | |
| Calling | : தலைமை காவலர் | |
| Religion | : | |
| Age | : 39 | |

Petitioner - (Pw3) (LW3)
Defence -
Court -

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.05.2026.

எதிர்மனுதாரர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்சமயம் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறையில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.12.2024 அன்று கள்ளக்குறிச்சி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் தலைமை காவலர் பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண். 295/2024 வழக்கில் கைப்பற்ற பட்ட 180மி.லி அளவுள்ள Old Chef ஸடிக்கர் ஒட்ட பட்ட பிராந்தியும் 1 பாட்டில்களும், மூடி திறந்த நிலையில் 180 மி.லி அளவுள்ள Veeran என்ற ஸ்டிக்கர் ஒட்டப் பட்ட 1 பாட்டில்கள் ஆக 2 பாட்டில்களும், இரசாயன பரிசோதனைக்கு அனுப்ப வேண்டி காவல் உதவி ஆய்வாளர் என்னை தனி அலுவலராக நியமித்து அளித்த வேண்டுகோள் கடிதத்தையும் அந்த மாதிரியில் சீல் வைத்து இந்நீதிமன்றத்தின் முன் ஆஜர் படுத்தி கனம் நீதிமன்ற கடித எண் 3139/2024 உத்தரவுபடி மாதிரிகளை விழுப்புரம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். அது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

25.09.2024 அன்று தான் இச்சம்பவம் நடைப்பெற்றது என்றாலும் வழக்கு சொத்து கைப்பற்றபட்டது என்றாலும் சரிதான். நாங்கள் 04.12.2024 அன்று தான் கைப்பற்றிய பாட்டில்களில் இருந்து 2 பாட்டில்களை பரிசோதனைக்கு அனுப்பினோம் என்றாலும் சம்பவ தேதியிலிருந்து 3 மாதம் காலதாமதாக பரிசோதனைக்கு அனுப்பினோம் என்றாலும் சரிதான்.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.**

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது மறுவிசாரணை இல்லை.

BANUMATHI

Digitally signed by BANUMATHI
Date: 2026.05.27 11:15:48 +0530